**அசல் வழக்கு எண் : 156 /2015**

**நாள்: 23.06.2026**

**பி.வா.சா. 1 - மாசிலாமணி த/பெ. ஸ்ரீராமன்**

**இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர். பிரதிவாதிகள் ஆஜர்**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கு சொத்தானது வாதி பங்கஜம் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். ஆதியிலிருந்து அப்பாதையைதான் நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். வழக்கு சொத்து ஆதியில் கந்தசாமி முதலியார் குமாரர் குப்புசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தை இவ்வழக்கின் வாதி கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) மேற்படி கிரய ஆவணத்தில் நான் இன்னார் என்று நிருபித்தவர்கள் என்ற இடத்தில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1தான் பங்கஜம் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1ல் இன்னார் என்று நிருப்பித்தவர்கள் என்ற இடத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால் சரிதான். அதபோல வா.சா.ஆ.1ல் 2வது சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் பெற்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அதற்கு முன்பாகவே அங்கு ரோடு இருந்தது.

3) வழக்கு சொத்தில் உள்ள பாதையின் வழியாகத்தான் நான் எனது நிலத்திற்கு செல்ல வேண்டும் என்றுதான் வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் நான் கையொப்பமிடுவதற்கு முன்னதாக அதில் உள்ள சங்கதிகளை என்னிடம் படித்துக்காட்டினார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் நான் குறிப்பிடும் பாதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அதற்கு முன்னதாக ராமகிருஷ்ண முதலியார் காலத்தில் பாதை போடப்பட்டது.

4) வா.சா.ஆ.1ல் உள்ள சங்கதிகளை என்னிடம் படித்துக்காட்டியபோது எனக்கு பாதை வசதி உள்ளது என்றும், அதுகுறித்த சங்கதிகளை வா.சா.ஆ.1ல் எழுதப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் பங்களா உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அதுகுறித்து வா.சா.ஆ.1ல் குறிப்பிட சொல்லி நான் கேட்டேனா என்றால், குறிப்பிடப்பட்டுள்ளது. அது எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு படிக்க தெரியாது. நான் குறிப்பிட்டுள்ளது போல மின் மோட்டார் குறித்து வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கு சொத்துக்குறித்து குப்புசாமி பெயரில் இருந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தானது குப்புசாமி என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் அவரின் தந்தை ராமகிருஷ்ண முதலியார் அவருக்கு பாகம் கொடுத்தார். மேற்படி பாகபிரிவினை ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் பாகம் அளிக்கப்பட்டது என்ற விவரமோ, அதன் ஆவணத்தில் யார் யார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரமோ எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாகம் கொடுத்த ஆவணத்தில் பாதை குறித்து ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) இவ்வழக்கு சொத்துகுறித்த புலவரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வழக்கு சொத்துக்கான புலவரைபடமா என்றால் ஆமாம். மேற்படி புலவரைபடத்தில் பாதை குறித்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு வடபுறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், வாதியின் மகனான பாலாஜி பெயரில் உள்ளது. தற்போது பாலாஜி பெயரில் இல்லையா என்றால் நிலவழிபாதையாக உள்ளது. அந்த நிலவழிபாதையானது எத்தனை ஏக்கரில் அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் நான் நிலவழிப்பாதை என குறிப்பிடுகிறேன் என்றால் அளவீடு செய்யப்பட்டது. எப்போது அளவீடு செய்யப்பட்டது என்றால் மூன்று மாதங்களுக்கு முன்னர் அளவீடு செய்யப்பட்டது. பாலாஜி பெயரில் உள்ள நிலமானது நிவழிபாதையாக உள்ளது என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. பாலாஜி நிலத்தின் வழியாகத்தான் வழக்கு சொத்துக்கும், அவரின் நிலத்திற்கும் செல்ல இயலும் என்றால் சரிதான். பாலாஜி நிலத்தில்தான் வருவாய்துறை ஆவணமான பட்டாவிலும், புலவரைபடத்திலும் நிலவியல் பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியானவர் வழக்கு சொத்துக்கு கிழபுறத்திலிருந்து பூதநத்தம் செல்லும் தார்சாலையின் வழியாகத்தான் தனது நிலத்திற்கு சென்று வருகிறார் என்றால் சரிதான்.

7) வாதியின் நிலத்திற்கு தென்புறத்தில் யார் நிலம் உள்ளது என்றால் கலையரசன் நிலம் உள்ளது. கலையரசன் என்பவர் அவரின் நிலத்தை விற்பனை செய்துவிட்டாரா என்றால் ஆம். எப்போது விற்பனை செய்தார் என்றால் 2 மாதங்களுக்கு முன்னர் விற்பனை செய்தார். கரையசரன் யாருக்கு விற்பனை செய்தாரோ அந்த விற்பனை

ஆவணத்தில் வழக்கு சொத்தின் வழியாக பாதை உரிமை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடபடவில்லை.

8) எனது நிலமானது கலையரசன் நிலத்திற்கு தென்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது நிலமானது நான் கிரயம் பெற்ற சொத்தா என்றால் பழைய காலத்து சொத்தாகும். எனது நிலத்திற்கு வழக்கு சொத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும் என்பதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எனது நிலத்திற்கு தென் புறத்தில் மெணசியிலிருந்து தோளனூர் செல்லும் பஞ்சாயத்து தார்சாலை உள்ளதா என்றால் உள்ளது. தொலைவில் உள்ளது. மேற்படி தோளனூர் சாலையிலிருந்து வடபுறத்தில் பாதை செல்கிறது என்றால் எங்களுக்கு செல்லவில்லை. பழனி என்பவர் நிலத்தோடு முடிவடைகிறது.

9) நான் சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச்செல்வதற்கு மேற்படி தென்புறம் செல்லும் பாதை வழியாகத்தான் சென்று வருகிறேன் என்றால் சரியல்ல. நான் 100 வருட காலமாக பாதை செல்வதாக குறிப்பிட்டுள்ளேன். 100 வருட காலமாக எனக்கு நீண்ட கால சுவாதீனத்தின் அடிப்படையில் பாதை உரிமை உள்ளது என எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது பதிலுரையிலும், எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் தாவா சொத்துக்கு கிழபுறத்தில்தான் பாதை உரிமை உள்ளதாகத்தான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், தாவா சொத்தில் பாதை உரிமை இருப்பதாக நான் குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. அதே சொத்தில்தான் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

10) நான் சர்வே எண்.173-க்கான புல வரைபடத்தை (பி.வா.சா.ஆ.2) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், வழிக்காக தாக்கல் செய்துள்ளேன். ஆதியிலிருந்து சென்றுவரும் வழிக்காக தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.3 ஆன சிட்டாவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ராமசந்திரன் பெயரில் உள்ள நிலத்தின் வழியாக அனைவருக்கும் பாதை உள்ளது என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ல் பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது.

11) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆன கிரய ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி கிரய ஆவணம் மூலமாக கிரயம் பெற்ற நபருக்கும் பாதை உரிமை உள்ளது என்பதற்காக அதனை தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.4ல் என்ன புல எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புல எண் தெரியாது. பி.வா.சா.ஆ.4 ஆனது எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

பி.வா.சா.ஆ.4ல் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4-ஐ எதற்காக நான் தாக்கல் செய்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

12) வழக்கு சொத்தானது வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும், அதில் எனக்கும் எனது மகனுக்கும், வேறு யாருக்கும் எவ்விதமான உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சொத்தை வாதி கிரயம் பெற்றபொழுது அதற்கான கிரய ஆவணத்தில் இன்னார் என நிருபித்தவர்கள் என்ற இடத்தில் சாட்சியாகவும், நானே கையொப்பம் செய்தேன் என்றாலும், அவ்வாறு கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கு சொத்தில் எனக்கு பாதை இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு இடையுறு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் செயல்பட்டதால்தான் என் மீது காவல்துறையில் வேடியப்பன் என்பவரால் புகார் அளிக்கப்பட்டு, அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், அது வேறு வழக்காகும். நான் கூறுவது தவறு என்றாலும், இவ்வழக்கு சொத்தில்தான் பிரச்சினை ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், வழக்கு சொத்தில்தான் பிரச்சினை ஏற்பட்டது. வழக்கு சொத்தினுடைய மூல ஆவணத்திலும், வழக்கு சொத்திற்கான ஆவணத்திலும் பாதை குறித்து எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் இவ்வழக்கானது வாதியின் செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.06.23 19:03:33 +0530